


முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில் தமிழகத்தை வஞ்சித்ததைக் கண்டித்து சண்முகராஜா கலை அரங்கில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் தலைமை வகித்தார். அயலக அணி செயலாளர் எம்.எம்.எ.அப்துல்லா எம்.பி., முன்னிலை வகித்தார். இதில் எழுத்தாளர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷிணி, தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன், துணைச் செயலாளர்கள் மணிமுத்து, நகர்கழக செயலாளர்கள் சி.எம்.துரை.ஆனந்த், என்.குணசேகரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கழகத் தலைவர் –முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் நிதிநிலை அறிக்கையை கண்டித்து மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில தீர்மானக்குழு செயலாளர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ குழந்தை வேலு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், கழக நிர்வாகிகள் மா ஜெயராம், தனச்செல்வம் மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், அதலை செந்தில்குமார், சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல் இளைஞர் அணி சவுந்தர்ராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

# சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுகம்!

### நூல்களை – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிடுகிறார்! அரசு கொறடா கோவி.செழியன் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை,ஜூலை 28- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுக விழா நடைபெறுகிறது.

இன்று (28.7.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை- தியாகராயர் நகர் - ஜி.என். செட்டி சாலையில் அமைந்துள்ள சர்.பிட்டி. தியாகராயர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவுக்கு மூத்த பத்திரிகையாளர் கோவி.லெனின் தலைமை வகிக்கிறார்.

கௌரா ராஜசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

32 நூல்களையும் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிட்டுச் சிறப்புரை யாற்றுகிறார்.

நூல்களை - தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன் பெற்றுக்கொள்கிறார்.

இவ்விழாவில் - திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் உமா, திராவிட இயக்க ஆய்வாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, திராவிட இயக்க உணர்வாளர் முனைவர் இரா. குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து, கழக தலைவர் – தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், உதகை ஏ.டி.சி பகுதியில் கழக துணை பொதுச்செயலாளர் கழக மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராசு தலைமையில், மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக முன்னணியினர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நெல்லை சந்திப்பு இரயில் நிலையம் முன்பு நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்டம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாநில மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் அப்துல்வகாப் எம்.எல்.ஏ. சு.சுப்பிரமணியன்,சுப.சீதாராமன், கிரகாம்பெல்,முருகன்,மாலைராஜா, ராஜு,விஜிலா சத்யானந்த்,ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், ஞானதிரவியம், சித்திக், லட்சுமணன், பேச்சிபாண்டியன், சுரேஷ், தர்மன், கிரிஜாகுமார், தமயந்தி, சுடலை கண்ணு, செல்வக் கருணாநிதி, வேலங்குளம் கண்ணன் பொன்னையா பாண்டியன், கருப்பசாமி கோட்டையப்பன், மீரான் மைதீன் காமினி தேவன், ராஜா முஹம்மது, உலகநாதன் குட்டி, சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராமநாதபுரத்தில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.தலைமையில்,மாவட்ட ஆட்சியர் வளாகம் அருகே முன்னாள் அமைச்சரும் உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான பொன்.முத்துராமலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுப.தங்கவேலன்,டாக்டர் சுந்தர்ராஜன், வ.சத்தியமூர்த்தி, மக்களவை உறுப்பினர் கே.நவாஸ் கனி, பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் முருகேசன், இன்பா ஏ.என்.ராகு, சுப.த. திவாகர், முருகவேல் மற்றும் மாநில, மாவட்ட, நகர, பேரூர் கழகம் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். முடிவில் கே.ஜே.பிரவீன் நன்றியுரை கூறினார்.

## நாட்டில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் எண்ணிக்கை அதிகரிக்க -

# இ.பாஸ்போர்ட் வழங்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

### மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 28 - நாட்டில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் எண்ணிக்கை அதிகரிக்கவும், விண்ணப்பித்தவர்களுக்கு பாஸ்போர்ட் வழங்குவதை துரிதப்படுத்தவும் இ.பாஸ்போர்ட் வழங்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் திமுகவின் வேலூர் மக்களவை தொகுதி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு:-

ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட (கடவுச்சீட்டு) பாஸ்போர்ட்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாவை?

நாட்டில் நிலுவையில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில வாரியாக நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மீதான ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் யாவை?

நாட்டில் தற்போது செயல்படும் பாஸ்போர்ட் சேவை மையங்களின் எண்ணிக்கை மாநில வாரியாக; நாட்டில் புதிய பாஸ்போர்ட் சேவை கேந்திரம்/மையங்களை அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால், மாநில வாரியாக அதன் விவரங்கள்?

நாடு முழுவதும் உள்ள கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்காகப் பதிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பாஸ்போர்ட் வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையெனில் அதற்கான காரணங்கள்?

குடிமக்களுக்கு உட்பொதிக்கப்பட்ட சிப்கள், எதிர்கால தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இபாஸ்போர்ட்டுகளை வெளியிடுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் தங்கள் கடவுச்சீட்டின் ஸ்கேனிங் சிக்கல்களால் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரச்சினைகளை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்ததா?

அதற்கு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

இந்தியாவில் வழங்கப்பட்ட பாஸ்போர்ட்களின் மொத்த எண்ணிக்கை 1,11,15,399 (2019), 54,12,614 (2020), 73,63,491(2021), 1,17,41,203 (2022), 1,37,54,4322 (2022), மற்றும் 66,05,906 (ஜனவரிஜுன் 2024) தமிழ்நாடு உட்பட நாட்டில் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை இன்றுவரை 86,430 ஆகும். நாடு முழுவதும் உள்ள RPOக்கள், வரைபடங்கள் மற்றும் கிராஸ் கிராண்டிங் அதிகாரிகளின் விவரங்கள் மூலம் சிறப்பு இயக்கங்கள் மூலம் நாடு முழுவதும் அமைப்பை மேம்படுத்த அமைச்சகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும், பணியின் தேவையைப் பொறுத்து, மத்திய பாஸ்போர்ட் அமைப்பின் அதிகாரிகள்/அதிகாரிகள், அந்தந்த பாஸ்போர்ட் அலுவலகங்களில் பணிபுரியும் பலத்தை அதிகரிக்க, பல்வேறு பாஸ்போர்ட் அலுவலகங்களில் தற்காலிகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

37 பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களின் (ஆர்பிஓக்கள்) கீழ் 93 பாஸ்போர்ட் சேவா கேந்திராக்கள் (பிஎஸ்கே) மற்றும் 440 போஸ்ட் ஆஃபீஸ் பாஸ்போர்ட் சேவா கேந்திராக்கள் (பிஓபிஎஸ்கே) உள்ளிட்ட 533 பாஸ்போர்ட் சேவை மையங்கள் தற்போது நாட்டில் செயல்பட்டு வருகின்றன.



தபால் அமைச்சகத் துறையுடன் இணைந்து ஜனவரி 2017 இல் நாட்டின் தலைமை அஞ்சல் அலுவலகங்களில் அஞ்சல் அலுவலகங்களில் ஒவ்வொரு பகுதியிலும் அஞ்சல் அலுவலக பாஸ்போர்ட் சேவா கேந்திரா எனப்படும் சேவா கேந்திராக்களை திறக்க முடிவு செய்தது. இல்லாத மக்களவைத் தொகுதிகளில் புதிய பாஸ்போர்ட் அலுவலகங்கள்/ மையங்கள் திறப்பது விண்ணப்பங்களின் அளவு உட்பட பல காரணிகளைப் பொறுத்தது.

“தட்கால்” திட்டத்தின் கீழ் விரைவாக பாஸ்போர்ட் வழங்குவதற்கான ஏற்பாடு உள்ளது, இதன் மூலம் மாணவர்களுக்கும் விரைவாக பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது. முறையான ஆவணங்களுடன் பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் விதிகளின்படி பாஸ்போர்ட் வழங்கப்படும்.

உட்பொதிக்கப்பட்ட சில்லுகளுடன் கூடிய இபாஸ்போர்ட்களை வெளியிடுவதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது, புவனேஸ்வர் மற்றும் நாக்பூரில் உள்ள பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களில் இபாஸ்போர்ட் திட்டத்தின் சோதனை நடந்து வருகிறது. வெற்றிகரமான சோதனை துவக்கம் மற்றும் தேவையான சான்றிதழ்களுக்குப் பிறகு, இது இந்தியா முழுவதும் உள்ள மீதமுள்ள பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகங்களில் படிப்படியாக வெளியிடப்படும். ePassport என்பது ஒரு ஒருங்கிணைந்த காகிதம் மற்றும் மின்னணு பாஸ்போர்ட் ஆகும். இதில் உட்பொதிக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண் அடையாள சிப் மற்றும் ஆண்டெனா உட்பொதிக்கப்பட்டுள்ளது. பாஸ்போர்ட்டின் முக்கியமான தகவல்கள்> அதன் தரவுப் பக்கத்தில் அச்சிடப்பட்டு> சிப்பில் சேமிக்கப்படும்> இதனால் அது மோசடி செய்வதை கடினமாக்குகிறது. ஆவணம் மற்றும் சிப்பின் பண்புகள் சர்வதேச சிவில் ஏவியேஷன் ஆர்கனைசேஷன் ஆவணம் 9303 இன் படி உள்ளன.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியப் பயணிகள் தங்கள் கடவுச்சீட்டின் ஸ்கேனிங் சிக்கல்கள் தொடர்பாக எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினையையும் ஒன்றிய அரசுக்கு தெரியவரவில்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.



மாவட்டச் செயலாளர்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி 176 வது வார்டு அனைத்து அரசுத்துறை அதிகாரிகளுடன் நேதாஜி காலனி செயலாளர் மற்றும் மக்களுடன் தொடர்பு கொண்டு மாமன்ற உறுப்பினர் வே. ஆனந்தம் தலைமையில் கோரிக்கைகளை ஆய்வு கொண்டனர்.உடன் நெசவாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் கழக த.ரமேஷ்,176வது வட்டக் கழக அவை தலைவர் கோ. சீனிவாசன்,வட்ட துணைச் செயலாளர் எஸ்.விநாயகமூர்த்தி, ஆர்.கே.குட்டி,பகுதி பிரதிநிதிகள் எம்.ஆர். அபிமன்னன்,வ.ஆதி மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி. பிரபு போஸ், ஜெயபிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.